# தமிழர் சமயம்

விலை ரூ.10/-

ஆண்டுச் சந்தா ரூ.100/–

மலர் 3 செப்டம்பர் 2012 இதழ் 8

Volume 3 September 2012 Issue 8





மலேசிய மாநாட்டில் வழங்கிய கட்டுரை....

## தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியப் படைப்புகள்

## பயிற்சி வகுப்புகள் -

### அறிவியல் நோக்கில் இந்து மதத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளுவது எவ்வாறு?

# பயிற்சி வகுப்புகள்

## அறிவியல் நோக்கில் இந்து மதத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளுவது எவ்வாறு?

**6 மாத - பயிற்சி வகுப்புகள் தொடக்கம்**

**நவம்பர் 2012 – ஏப்ரல் 2013**

**ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை மற்றும் வியாழக் கிழமை**

**மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை**

**இடம்**

உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்,
தலைமை அலுவலகக் கருத்தரங்கக் கூடம்,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம்,
சென்னை – 600 023. தொலைபேசி: 044–26743842
அலைபேசி: 9962243382; 9444817394; 9840003842

**பதிவுக் கட்டணம்: ரூபாய் 2000/–**




– **ஆசிரியர்**

இந்தியா 1947இல் விடுதலை அடைந்தது. 1956இல் இந்தியா மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.

1956 முதல் இந்தியா முழுவதும் அந்தந்த மொழி பேசும் மக்களே அந்தந்த மாநிலங்களை ஆண்டு வருகின்றனர்.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டுமே தமிழரல்லாதோர் ஆளும் நிலை இருக்கிறது.

இன்று தமிழ் நாட்டிலுள்ள பெரிய அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழரல்லாதவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

இன்று தமிழகத்தை ஆளும் செல்வி ஜெயல–தா ஒரு கன்னடப் பிராமணப் பெண்மணி.

எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் விஜயகாந்த் ஒரு தெலுங்கர்.

சட்டசபையில் அதற்கு அடுத்த கட்சிக்குத் தலைவராக விளங்கும் கலைஞர் ஒரு தெலுங்கர் எனக் கூறப்படுவதை மறுக்க இயலாத ஒரு தெலுங்கர்.

அதற்கு அடுத்த பெரிய கட்சித் தலைவராக விளங்கும் வைகோவும் ஒரு தெலுங்கரே.

இவர்கள் அனைவரும் தங்கள் கட்சிக்குத் தலைமை தாங்கிக் கொண்டு, தமிழக ஆட்சியில் அவர்கள் கட்சியிலுள்ள ஒரு தமிழருக்கு இடம் கொடுக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளை இவர்கள் அனைவரும் புறந்தள்ளிவிட்டார்கள். **இதற்குக் காரணம் என்ன?**

மொழி வழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் மலையாளிகள் மலையாள நாட்டை ஆண்டு வருகின்றார்கள். கன்னடர் கன்னட நாட்டை ஆண்டு வருகின்றார்கள். தெலுங்கர் தெலுங்கு நாட்டை ஆண்டு வருகிறார்கள். **தமிழ் நாட்டைத் தமிழர் ஆளுவதே நேர்மையானது. இந்திய இறையாண்மைக்கு ஏற்றது.** ஆனால், தமிழ் நாட்டில் சிறுபான்மையாக வாழும் மலையாளியும், கன்னடரும், தெலுங்கரும் ''நாங்களே, தமிழ் நாட்டில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களை ஆண்டே தீருவோம்'' என அடம் பிடிப்பது இந்திய இறைாண்மை தமிழ் இனத்திற்குக் கொடுத்திருக்கும் உரிமைக்கு எதிரானது அல்லவா? இங்கு ஒரு கேள்வி எழுகின்றது.

தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த போதிலும் மக்கள் ஆட்சி நடைபெறும் இக்காலத்தில், வேற்றவர்களாகிய அந்நியர்களுக்கு வாக்களிக்கின்றார்கள் என்றால் அதன் அடிப்படைக் காரணம் என்ன?

தமிழ் இனம் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அந்நியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு, மூளைச் சலவை செய்யப்பட்டு மனநோயாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதே வரலாறு. எவ்வாறு?

கடந்த ஆயிரம் ஆண்டுகளாக, தமிழரல்லாத அந்நியர்கள் தமிழ் நாட்டின் மீது மாறி மாறிப் படை எடுத்து வந்து தமிழர்களுடைய நிலங்களையும் வீடுகளையும் தமிழர் கோவில்களையும் அபகரித்து, தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் தமிழர் வாழ்க்கை முறையையும் இழிவுபடுத்தி நசுக்கி இன்றும் தமிழ் நாட்டிலேயே அதிகச் செல்வாக்குடன் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்த அந்நியர்களைப் போன்று, இந்தியாவின் மீது கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரை தனித்தனியாகப் படை எடுத்து வந்த 1. பாரசீகர் 2. கிரேக்கர் 3. சகர் 4. குசாணர் 5. கூணர் ஆகிய ஐந்து பிரிவினரும் வணிகத்திற்காக வந்த 6. ரோமர் ஆகிய ஆறு பகுதியினரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் ராஜஸ்தானிலுள்ள அபுமலையில் அந்நியர்களாகிய அவர்களுடைய வெள்ளை நிற அடிப்படையில் கூட்டணி அமைத்து, வட இந்தியாவின் பெரும்பகுதியைப் பிடித்து **''ஆரியர் நாட்டை''** அமைத்து கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். ஆரிய நாட்டின் சட்ட நூலாக ஆரியர்களுக்கு ஒரு நீதியும், இந்தியர்களு வேறு ஒரு நீதியும் கூறும் மக்களைச் சாதி வாரியாகப் பிரிக்கும் மனுநூல் உருவாக்கப்பட்டது.

இந்தியா 1947இல் விடுதலை அடைந்த பொழுது ஐரோப்பிய வெள்ளையர்கள் இந்தியாவை, ஆரிய வெள்ளையரிடம் ஒப்படைத்துச் சென்றார்கள். ஆரியர்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் பிராமணர்கள். ஆரியர்களின் மனுநூல் கொள்கை விடுதலை இந்தியாவிலும் தொடர்கின்றது.

''காஷ்மீர் பிராமணர்'' என்பதைக் குறிக்கும் ''பண்டிதர்'' என்னும் அடைமொழியைத் தன் பெயருக்கு முன்னர் கொண்டுள்ள பண்டித ஜவஹர்லால் நேருவும் அவருடைய குடும்பத்தினரும், விடுதலை இந்தியாவை ஆண்டு வருகின்றார்கள். விடுதலை இந்தியா ஆரியப் பிராமணர் கையில் அடிமைப்பட்டு சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டைத் தமிழரல்லாத அந்நியர்களும், இந்தியாவை இந்தியரல்லாத ஆரியர்களும் ஆண்டு

வருகின்றார்கள்.

மன்னர் ஆட்சிக் காலத்தில் இவ்வித ஆட்சி நடைபெறலாம். மக்கள் ஆட்சிக் காலத்தில் இது எவ்வாறு இயலுகிறது? இதில்தான் அந்நியர்களின் சூழ்ச்சி அடங்கி இருக்கிறது.

அந்நியர்கள் ஆளும் இடங்களில், காட்டிக் கொடுக்கிறவர்களுக்கு உயர்வும், எதிர்த்து நிற்பவர்களுக்கு இழிவும் கொடுக்கப்படுவது இயல்பு. இந்த அடிப்படையில் இந்தியாவில் ஆரியப் பிராமணர்களால் உருவாக்கப்பட்ட சாதி, ஏற்றத்தாழ்வுக் கொள்கை என்னும் ஆரிய வாழ்க்கை முறை அவர்களுக்குப் பயன்படுகிறது. தமிழகத்திலும் இதே நிலை கடைப் பிடிக்கப்படுகிறது.

இதனால், இந்தியாவில் மண்ணின் மைந்தர்களாகிய உண்மை இந்தியர்களும் தமிழகத்தில் மண்ணின் மைந்தர்களாகிய உண்மைத் தமிழர்களும் அடிமைகள் ஆக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டு நசுக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தியாவின் மீது படை எடுத்து வந்து இந்திய மக்களை அடிமைப்படுத்திய ஆரியர்களுக்குத் தலைமை தாங்கும் ஆரியப் பிராமணர்கள், தமிழ் நாட்டின் மீது படை எடுத்து வந்து தமிழர்களை அடிமைப்படுத்திய தமிழரல்லாத அந்நியர்களை நன்கு பயன்படுத்தி தமிழர்களை மூளைச் சலவை செய்து மன நோயாளிகளாக மாற்றியுள்ளனர். ஒருவரைத் தம்மைவிட மேல் சாதியினர் என நம்புவதும் இன்னொருவரைக் கீழ்சாதியினர் என நம்புவதும் மனநோயின் வெளிப்பாடே.

தமிழர்களை மூளைச் சலவை செய்வதற்கும் தமிழர்களை மன நோயாளிகளாக மாற்றுவதற்கும் ஆரியப் பிராமணர்கள் தமிழர்களின் ஆன்மீகத்தையே பயன்படுத்தினார்கள். இன்றும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தமிழ் நாடு இந்திய ஆட்சியோடு இணைக்கப்பட்டு, தமிழ் நாட்டில் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்ட தமிழர் சமயத்திற்கு **"இந்து மதம்"** என்னும் புதுப் பெயர் ஆங்கிலேயர்களால் கொடுக்கப்பட்டது.

இந்திய மதங்களான சமணம், பெயத்தம், சைவம், வைணவம், சீக்கியம் ஆகிய ஐந்தில், சைவ, வைணவம் ஆகிய இரண்டை மட்டுமே ''இந்து மதம்'' என்னும் புதுப் பெயர் குறித்தது.

இந்து மதமான சைவத்தையும் வைணவத்தையும் உருவாக்கி வளர்த்தவர்கள் தமிழர்கள். எவ்வாறு?

சைவ சமயத்தை வளர்த்த நாயன்மார்கள் 63 பேர். 63 நாயன்மார்களும் தமிழகத்தில் மட்டும் பிறந்தவர்கள்.

வைணவ சமயத்தை வளர்த்த ஆழ்வார்கள் 12 பேர். 12 ஆழ்வார்களும் தமிழகத்தில் மட்டும் பிறந்தவர்கள்.

சைவ சமய இலக்கியங்கள் 12 திருமுறை. 12 திருமுறையும் தமிழ் மொழியில் மட்டுமே உருவாகி இருக்கிறது.

வைணவ சமய இலக்கியங்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் அனைத்தும் தமிழ் மொழியில் மட்டுமே உருவாகி இருக்கின்றன.

இந்தியா முழுவதிலும் உள்ள மிகப் பழைமையான சைவக் கோவில்கள் ஏறத்தாழ 280. இந்த 280 கோவில்களில் 274 கோவில்கள் தமிழகத்தில் இருக்கின்றன.

இந்தியா முழுவதிலும் உள்ள மிகப் பழமையான வைணவக் கோவில்கள் 108. இதில் 96 கோவில்கள் தமிழகத்தில் இருக்கின்றன.

சைவ சமயத்தின் தலைமைக் கோவில் சிதம்பரம் நடராசர் கோவில், சிதம்பரம் தமிழகத்தில் இருக்கிறது.

வைணவத்தின் தலைமைக் கோவில் திருவரங்கத்தில் உள்ளது. திருவரங்கம் தமிழகத்தில் இருக்கிறது.

தென்னாட்டில் குடியேறிய ஆரியப் பிராமணர் பரம்பரையைச் சேர்ந்த சங்கரர், இராமனுஜர், மாத்துவர் ஆகிய மூவரும், தமிழர்களின் சைவ வைணவச் சின்னங்களை நெற்றியில் அணிந்து கொண்டு, தமிழர்களால் உருவாக்கப்பட்ட ஆன்மீக நூல்களுக்கு உடல் உயிர் ஆகிய இரண்டை மட்டுமே அறிந்த நிலையில், கடவுளையும் ஆன்மாவையும் அறியாநிலையில், உரை எழுதினார்கள். அவை, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என அழைக்கப்படுகின்றன.

ஆன்மாவையும், கடவுளையும் அறியா நிலையில் ஆரியப் பிராமணர்களால் எழுதப்பட்ட உரைகளின் குறைகளை நீக்கி அடிப்படை உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் தமிழராகிய மெய்கண்டாரால் எழுதப்பட்ட மூலநூலே சிவஞானபோதம். இதுவே தமிழர்களின் சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படை நூல்.

இந்த நூலே இந்திய ஆன்மீகத்திற்கும் இந்து மதத்திற்கும் மணி முடியாகத் திகழும் ஒப்பற்ற ஆன்மவியல் நூல். "ஆன்மவியல்" என்பது ஆன்மாவையுடைய மனிதனைப் பற்றிய கல்வி.

உடலைப் பற்றிய கல்வி = அறிவியல். உயிரைப் பற்றிய கல்வி = மெய்யியல், இறைவனைப் பற்றிய கல்வி – இறையியல், ஆன்மாவைப் பற்றிய கல்வி = ஆன்மவியல். உலக மொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே ஆன்மவியல் இருக்கிறது. ஆன்மவிய–ல், அறிவியல், மெய்யியல், இறையியல் ஆகிய மற்ற மூன்றும் அடங்கி விடுகின்றன.

மேலே கூறப்பட்டுள்ளவற்றி–ருந்து உலகின் ஒப்பற்ற மொழியாகத் தமிழ் மொழியும் ஒப்பற்ற இனமாகத் தமிழ் இனமும், ஒப்பற்ற வாழ்க்கை முறையாகத் தமிழர் வாழ்க்கை முறையும் விளங்குவதை யாரும் மறுத்தல் இயலாது.

ஆனால் இன்று தமிழர் வாழ்க்கை முறை, அந்நியர்களின் வாழ்க்கை முறையால் சிதைக்கப்பட்டுவிட்டது. தமிழ் இனமும் தமிழ் மொழியும் அந்நியர்களால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறு?

இந்திய மொழிகளில் தமிழ் "தென்மொழி" என்னும் பெயராலும் சமஸ்கிருதம் ''வடமொழி'' என்னும் பெயராலும் குறிக்கப்படுகின்றன.

இந்திய ஆன்மீகம் இந்த இரண்டு மொழிகளாலும் விளக்கப்படுகின்றது.

சமஸ்கிருதம் தமிழரல்லாத இந்திய மக்களுக்குத் தமிழர்களின் ஆன்மீகக் கருத்துகளை விளக்குவதற்காகத் தமிழ் ஞானிகளால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை மொழி.

வேதாந்தக் கொள்கையையுடைய சைவ, வைணவ சமயங்களாகிய தமிழ் நாட்டில் உருவான தமிழர் சமயக் கருத்துகளை இந்தியா முழுவதும் அறிவிக்கும் நோக்கோடு சமஸ்கிருதம் உருவாக்கப்பட்டது.

ஆகவே தென் மொழியாகிய தமிழ்,

தமிழர்களின் தாய்மொழி. வடமொழியாகிய சமஸ்கிருதம் தமிழர்களின் ஆன்மீகக் கருத்தை இந்தியா முழுவதும் பரப்புவதற்காக உருவாக்கிப் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி மொழி. அது எவருக்கும் தாய் மொழி அன்று.

ஆரியப் பிரிவிலுள்ள ஆறு பகுதியினர்க்கும் தனித்தனியாக அவர்களுக்குத் தாய் மொழி இருந்தது என்பது வரலாறு.

சமஸ்கிருதத்தில் இராமாயணத்தை எழுதிய வால்மீகியும், மகாபாரதத்தை எழுதிய வேதவியாசரும், சமஸ்கிருதக் காப்பியங்களை எழுதிய காளிதாசரும் ஆரியர் அல்லர். தென் இந்தியப் பிராமணர்களாகிய சங்கரர், இராமனுஜர், மாத்வர் ஆகிய மூவரும் உரையாசிரியர்களே தவிர மூல நூல் ஆசிரியர் அல்லர்.

இந்து மதத்தின் மூல நூல்கள் அனைத்தும் ஆரியரல்லாதாரால் எழுதப்பட்டவையே என்பது வரலாறு.

இந்திய ஆன்மீகத்திற்குரியவர்கள் அனைவரும் தமிழர்களே அன்றி ஆரியப் பிராமணர் எவரும் இலர். அதாவது இந்திய ஆன்மீகம் ஆரியரல்லாத தமிழர்களுக்கு உரியது. தமிழ் மொழியில் இருப்பது.

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக மொழிகளில் தலை சிறந்தது தமிழ் மொழி. எவ்வாறு?

1. மொழிகள் மனித சமுதாயத்தால் மட்டுமே பேசப்படுகின்றன. மனித சமுதாயத்தால் பேசப்படும் மொழிகளில் மனிதனைப் பற்றிய ஆராய்ச்சி, தமிழ் மொழியைத் தவிர உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை.
2. மனிதனை ‘உயர்திணை’ என்றும் மற்ற உயிரினங்களை **“அஃறிணை”** என்றும் பிரித்து இலக்கணத்தில் விளக்கும் விளக்கம் உலக மொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே இருக்கிறது.
3. உலகிலுள்ள உயிரினங்களை ஆறு பிரிவுகளாகப் பிரித்து **“ஆறாவது அறிவு மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது’** என்பதை அறிவியல் வழியில் நிலைநாட்டி இருப்பது தமிழ் மொழி ஒன்றே.
4. **“ஆறாவது அறிவு என்பது கடவுளை உணரும் உணர்வு”** என்பதை, உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத பொருள் இலக்கணத்தின் வழியாக நிலை நாட்டிக் காட்டுவது தமிழ் மொழி ஒன்றே.
5. உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத நிலையில் **கடவுளைப்** பற்றியும், ஆறாவது அறிவுக்குக் காரணமான **ஆன்மாவைப்** பற்றியும், அனைத்து உயிரினங்களுக்கும் இருக்கும் **உயிரைப்** பற்றியும் அறிவியல் வழியில் நிலைநாட்டிக் காட்டும் **“சிவஞானபோதம்”** என்னும் ஆன்மீக இலக்கண நூல் தமிழ் மொழியில் மட்டுமே இருக்கிறது.

ஆகவே, உலக மொழிகளில் தமிழ் மொழிக்கு நிகரான வேறு ஒரு மொழி உலகில் இல்லை. தமிழ் மொழி ஓர் ஆன்மீக மொழி. ஒரு தெய்வீக மொழி.

இந்தியாவுக்கு வெளியில் இருந்து படை எடுத்து வந்து இந்திய மக்களை அடிமைப்படுத்திய ஆரியர்களுக்குத் தலைமை தாங்கும் ஆரியப் பிராமணர்களின் வாழ்க்கை முறையாகிய சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையும், ஆரியப் பிராமணர்களின் திட்டமிட்ட சூழ்ச்சியுமே இதற்குக் காரணம்.

(ஆன்மீகம் – என்பது வேறு. ஆன்மவியல் – என்பது வேறு. ஆன்மீகம் என்பது வழிபாடு, சமயம் ஆகிய அனைத்திற்கும் உரிய பொதுப் பெயர். ஆன்மவியல் என்பது மனிதனுக்கு மட்டுமே இருக்கும் ஆறாவது அறிவுக்குக் காரணமான ஆன்மாவைப் பற்றிய கல்வி)

உலக மக்கள் அனைவரையும் உறவினர்களாகக் கண்டு உலக மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் தமிழர் வாழ்க்கை முறை வேறு. இதற்கு நேர் எதிரான உலக மக்களிடையே பிரிவினையையும் மோதலையும் உருவாக்கி அவர்களை அடிமைப்படுத்தி ஆளத் திட்டமிடும் ஆரியப் பிராமணர்களின் அரசியல் வாழ்க்கை முறை வேறு.

தமிழர் வாழ்க்கை முறை உலக மக்களுக்கு நிலையான நன்மையைக் கொடுப்பது. ஆரியப் பிராமணர்களின் வாழ்க்கை முறை உலக மக்களுக்கு நிலையான தீமையைக் கொடுப்பது. ஆன்மீகத்திற்குப் பயன்படுவது தமிழர் வாழ்க்கை முறை. அரசியலுக்குப் பயன்படுவது ஆரியப் பிராமணர்களின் வாழ்க்கை முறை.

இதன் காரணமாகவே, வணிகத்திற்காக வந்த ஐரோப்பியர்கள் இந்திய ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இந்திய மக்களின் ஒற்றுமையின்மைக்குக் காரணமான ஆரியப் பிராமணர்களின் வாழ்க்கை முறையும், அந்த வாழ்க்கை முறைக்கு காரணமான மனு நூலும் மிகவும் பிடித்தமானதாயின.

சர். வில்–யம் ஜோன்ஸ் என்னும் ஆங்கிலேயர் 1794இல் ஆங்கிலத்தில் மனு நூலை மொழி பெயர்த்தமையால் மனுநூல் கொள்கை ஐரோப்பா முழுவதும் பரவியது. மனு நூலைக் கையில் தூக்கிப் பிடித்தபடி உள்ள வில்–யம் ஜோன்ஸ் சிலை இன்றும் இலண்டன் புனிதப் பவு–ன் பேராலயத்தில் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர்களின் ஆன்மீகம் மனுநூ–ல் இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

மேக்ஸ் முல்லர் என்னும் செர்மானியர் சமஸ்கிருத மொழி பேசும் “ஆரியர்” என்னும் ஒரு தனி இனம் இருப்பதாகவும், ஐரோப்பியர் அந்த ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்திய ஆன்மீகம் ஆரியப் பிராமணர்களுக்கு உரியது என்றும் தவறாக நம்பி, அந்தத் தவறான நம்பிக்கையை உலகம் முழுவதும் பரப்பினார்.

இந்தத் தவறான நம்பிக்கையின் காரணமாக, “ஆரிய இனமே உலகை ஆளப்பிறந்த இனம்'' என்னும் முழக்கத்தின் அடிப்படையில் 60 இலட்சம் யூதர்களை ஹிட்லர் கொன்று குவித்த கொடுமையை உலகம் கண்டது. மேக்ஸ் முல்லரின் தவறான நம்பிக்கையே இன்றும் உலகம் முழுவதும் பல்கலைக் கழகங்களில் பாடமாக நடத்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே, தமிழர் ஆன்மீகச் சிறப்பும், தமிழர் ஆன்மீகத்தைக் கூறும் தமிழ் மொழியின் சிறப்பும் தமிழ் மொழியைப் பேசும் தமிழ் இனத்தின் சிறப்பும் மறைக்கப்பட்டு மறைந்து கிடக்கின்றன. தமிழர் ஆன்மீகச் சிறப்பையும், தமிழ் மொழியின்

சிறப்பையும், தமிழ் இனத்தின் சிறப்பையும் வெளியே கொண்டு வருவது எவ்வாறு?

1. விடுதலை இந்தியாவின் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் இனம், அரசிய–ல் விடுதலை அடைய வேண்டும்.
2. இதற்குத் தமிழ் நாட்டிலுள்ள அந்நியர்களின் தலைமையிலான அரசியல் கட்சிகளி–ருந்து தமிழ் இனம் விடுதலை அடைய வேண்டும்.
3. தமிழ் நாட்டில் அரசியல் கட்சி களுக்குத் தலைமை தாங்கும் அந்நியர்கள், அவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழர்களுக்கு, பதவி, பணம் விளம்பரம் ஆகிய மூன்றையும் கொடுக்கக்கூடிய வாய்ப்புடையவர் களாக இருக்கின்றார்கள்.
4. இதனால் பதவி, பணம், விளம்பரத்தை விரும்பும் தமிழர்கள் அந்நியர்களின் தலைமையிலுள்ள அரசியல் கட்சிகளில் அடிமைகளாக இருப்பதில் சுகம் காணுகின்றார்கள்.
5. அடிமைகளாக இருப்பதில் சுகம் காணும் தமிழர்களுக்கு, அவர்கள் விரும்பும் பதவி, பணம், விளம்பரம் ஆகிய மூன்றும், நேர்மையான முறையில் அவர்களுக்குக் கிடைக்காமல், அவர்களுடைய இனத்தையும், மொழியையும், ஆன்மீகத்தையும் அந்நியர்களுக்குக் காட்டிக் கொடுப்பதாலும் இந்த மூன்றன் அழிவி–ருந்தும் அவர்களுக்குக் கிடைக்கின்றன என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளும் முறையில் அவர்களுக்கு விளக்கப்படல் வேண்டும்.
6. இவ்வாறு விளக்கப்படும்பொழுது, தன்மான உணர்வுகளுடையவர் களும், இனமான உணர்வுடையவர் களும், உண்மையான ஆன்மீக உணர்வுடையவர்களும், அடிமையாய் இருப்பதில் சுகம் காணும் இழிநிலையி–ருந்து விடுதலை அடைய வாய்ப்பு ஏற்படுகிறது.
7. இதைச் செய்வதற்கு, பதவி, பணம், விளம்பரத்தை விரும்பும் அரசியல் வாதிகள் பயன்படமாட்டார்கள்.
8. உலக ஆன்மீகத்தின் மணிமுடியாக விளங்கும் தமிழர் ஆன்மவியலை அறிந்து உணர்ந்தவர்களே இப்பணியில் ஈடுபட இயலும் என்பதை, கடவுள் எங்களுக்கு உணர்த்தினார்.

## கடவுள் எங்களுக்கு உணர்த்தியது எவ்வாறு?

♦ இலங்கையில் தமிழ் இனம் அநியாய முறையில் அழிக்கப்பட்டபொழுது அதை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கைது செய்யப்பட்டவர்களில் நாங்களும் உண்டு.

♦ இலங்கையில் நடந்த தமிழ் இன அழிவுக்குப் பின்னர் 2011இல் நடைபெற்ற தமிழக சட்ட மன்றத் தேர்த–ன்போது, இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்பட்டபொழுது அதை எதிர்த்துக் குரல் கொடுத்து கைது செய்யப்பட்டவர்கள், வேட்பாளர்களாகத் தேர்த–ல் நிற்பார்களானால் அவர்கள் வெற்றியடைய எங்களால் இயன்றதைச் செய்ய வேண்டியது ஆன்மீகவாதிகளாகிய எங்கள் கடமை என்னும் உணர்வு எங்களுக்கு ஏற்பட்டது.

♦ கட்சிகளைப் பற்றியோ, அக்கட்சிகளின் கூட்டணி பற்றியோ கவலைப்படாமல், நாங்கள் வேட்பாளர்களை ஆராய்ந்தபோது 234 தொகுதிகளில் 46 பேர் மட்டுமே, இலங்கைத் தமிழர் களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதை அறிந்தோம்.

♦ தமிழரல்லாதார் தலைமையிலுள்ள எந்தக் கட்சியும் இதில் இடம் பெறாமை எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தமிழர் தலைமையிலுள்ள மூன்று சிறிய கட்சியில் உள்ளவர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். அதில் இந்த மூன்று கட்சிகளும் இரண்டு அணிகளில் இடம் பெற்றிருந்தனர்.

♦ ஆகவே, நாங்கள் கட்சிகளையோ, அணிகளையோ கணக்கில் கொள்ளாமல் வேட்பாளர்களை நாடி அவர்களுடைய வெற்றிக்காக, தமிழகத் தேர்தல் ஆணையின் தலைவரிடமும், தமிழகக் காவல்துறைத் தலைவரிடமும் அனுமதி பெற்று தமிழ்நாடு முழுவதும் பரவிக் கிடந்த 46 தொகுதிகளுக்கும், சென்று தேர்தல் பணியாற்றித் திரும்பினோம்.

♦ **இந்தத் தேர்தல் பணி, தமிழ் இனமும், தமிழ் மொழியும், தமிழர் ஆன்மவியலும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால் “தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்” என்னும் உண்மையை எங்களுக்கு உணர்த்தியது.**

♦ இதனால் தேர்தல் நிறைவடைந்து, முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர் 30–04–2011 அன்று, “தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்” என்னும் கோரிக்கையின் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் நடத்த சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரிடம் அனுமதி கோரினோம்.

♦ அனுமதி மறுக்கப்பட்டமையால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு காவல் துறைக்கு நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்று, பின்னர் காவல்துறை அனுமதியுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம்.

♦ **ஆன்மீகவாதிகளாகிய நாங்கள் அரசியல்வாதிகளைப் போல் போராட்டம் நடத்த விரும்பாமையால், 12–05–2011இல் தேர்தல் முடிவுகள் வெளிவருமுன்னர், தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வழிவகுக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை நோக்கி தி.நகர் தெய்வநாயகம் பள்ளியில் ஆன்மீகவாதிகளின் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தினோம்.**

♦ இத்துடன், தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் தமிழக முதல்வராகப் பதவி ஏற்க, தமிழரல்லதார் தலைமையிலுள்ள கட்சிகள், ‘ஆட்சிக்குத் தலைமை தாங்காமல் கட்சிக்குத் தலைமை தாங்கி’ சோனியா காந்தியைப் பின்பற்றி, அவர்கள் கட்சியிலுள்ள தமிழர் ஒருவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளுக்குக் கடிதம் எழுதினோம்.

– தொடரும்

மலேசியத் தமிழ்க் கிறிஸ்தவ எழுத்தாளர் சங்கம், உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் ஆதரவோடு மலாயாப் பல்கலைக் கழகத்தில் 2012 சூலை 19 முதல் 21 வரை ஏழாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டை நடத்தியது.

**மலேசிய மாநாட்டில் வழங்கப்பட்ட நமது கட்டுரை**

# தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியப் படைப்புகள்

(கி.பி. 1ஆம் நூற். – கி.பி. 14ஆம் நூற்.)

(கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடையேயுள்ள கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்கள்)

– முனைவர் தெ. தேவகலா M.A., M.Phil., Ph.D

தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம் என்றவுடன் பொதுவாகப் பலருக்கும் நினைவிற்கு வருவது கி.பி. 16 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்தாம். ஆனால், கி.பி. முதல் நூற்றாண்டி–ருந்தே தமிழகத்தில் கிறிஸ்தவம் பரவியுள்ளதால், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளின் தொடக்கக் காலங் களி–ருந்தே தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் தமிழகத்தில் காணப் படுகின்றன.

## கி.பி. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவம்:

கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த கிறிஸ்தவத்தை இரண்டு பெரும் பகுப்புகளில் காணலாம்.

1. புனித பேதுரு வழி யூதக் கிறிஸ்தவம்
2. புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம்

இவற்றுள் புனித பேதுரு வழி யூதக் கிறிஸ்தவம் எருசலேம், யூதேயா மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் புனித பேதுரு விதைத்த நற்செய்தி மற்றும் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் ஆற்றிய நற்செய்திப் பணியின் விளைவாக உருவானது.

புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம் என்பது புனித தோமா தமிழகத்தில் விதைத்த நற்செய்தியின் விளைவாக உருவானது.

## தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவம்:

தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவத்தை இரண்டு பெரும் பிரிவுகளாகக் காணலாம்.

1. புனித தோமா வழி தமிழ்க்கிறிஸ்தவம்
2. ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவம்

## 1. புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம்:

(கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல்)

புனித தோமா தமிழ் மண்ணில், தமிழ் மொழியில், தமிழ்ப் பண்பாட்டில் விதைத்த நற்செய்தி தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவமாக மலர்ந்துள்ளது. கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் தமிழ் மண், தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டிலேயே வளர்ந்த கிறிஸ்தவம் புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம் ஆகும்.[1]

- *பொதுவாக, 'புனித தோமா வழிக் கிறிஸ்தவம்' என்றவுடன் அது சீரியக் கிறிஸ்தவத்தைக் குறிப்பதாகவே எண்ணப்படுகிறது.*
- *ஆனால், 'புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம்' என்பது தமிழ் நாட்டில், தமிழ் மண்ணில், தமிழ்ப்பண்பாட்டில் கி.பி.முதல் நூற்றாண்டி–ருந்து வளர்ந்த தமிழ்க் கிறிஸ்தவத்தைக் குறிக்கிறது.*

## 2. ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவம்:

(கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்)

ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவம் என்பது ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்து விதைத்த ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த கிறிஸ்தவம் ஆகும். ஐரோப்பியர்கள் சென்ற பின்பு அவர்கள் விதைத்த ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த கிறிஸ்தவம் ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவம் ஆகும். இது கி.பி. 16 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகும்.[2]

தமிழகத் தமிழ்க் கிறிஸ்தவம் என்றவுடன் பொதுவாக கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவமே அனைவராலும் பேசப்படுகின்றது. ஆனால், கி.பி. முதலாம் நூற்றாண்டி–ருந்து வளர்ந்த புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம் அறியப்படவில்லை.

## தமிழகக் கிறிஸ்தவ இலக்கியங்கள்

பொதுவாகக் கிறிஸ்தவ இலக்கியங்கள் இந்தியாவில்

**1. தமிழ் 2. சமஸ்கிருதம்** ஆகிய இரண்டு மொழிகளிலும் இருக்கின்றன. இந்தியாவில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டு களிலேயே தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆனால், சமஸ்கிருதக் கல்வெட்டு கி.மு.வில் காணப்படவில்லை. முதல் சமஸ்கிருதக் கல்வெட்டு கி.பி.150இல்தான் காணப்படுகிறது.[3]

தமிழ் நாட்டில் உருவான புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் தமிழ் மொழியிலேயே உருவாயின. தமிழ் மொழி பேசாத, அறியாத இந்தியர்களுக்காகப் புனித தோமா வழி கிறிஸ்தவத்தில் தமிழைப் பின் தொடர்ந்து சமஸ்கிருத மொழி பயன்படுத்தப்பட்டது.[4] இவ்வாறு தமிழ், சமஸ்கிருத மொழிகளில் கிறிஸ்தவ இலக்கியங்கள் இருக்கின்றபோதிலும் தமிழகத்தில் தமிழ் மொழியில் உருவான கி.பி.16 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட இலக்கியங்களே பொதுவாக ஆராயப்படுவதால், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளின் தொடக்கக் காலங்களி–ருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டு களின் இடையேயுள்ள பகுதியில் உருவான தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

பொதுவாக, புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ளுவதில் ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குச் சிக்கல் உள்ளது. ஏனென்றால், ஐரோப்பிய வழி தமிழ்க் கிறிஸ்தவர், புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைத் திருமறை நோக்கில், அவரவர் பண்பாட்டு அடிப்படையில், புரிந்து கொள்ள முயற்சிக்காமல் ஐரோப்பிய நோக்கில் பார்ப்பதால் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ளுவது அவர்களுக்குக் கடினமாக உள்ளது.[5] ஆனால், யூதனுக்கு யூதன், கிரேக்கனுக்கு கிரேக்கன் என்று நற்செய்தி சொல்லும் திருமறை வழியில் நோக்கும்போதுதான் புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைத் தமிழ்ப் பண்பாட்டடிப்படையில் புரிந்து கொள்ள இயலும்.

## திருமறை–கிறிஸ்து வருவதற்கு முற்பட்ட நிலையும் (பழைய ஏற்பாடு) கிறிஸ்து வந்த பின் உள்ள நிலையும் (புதிய ஏற்பாடு):

திருமறையில் கிறிஸ்து வருவதற்கு முற்பட்ட

நிலைக்கும் கிறிஸ்து வந்தபின் உள்ள நிலைக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளும்போதுதான் கிறிஸ்துவின் ஒளியில் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இந்த வேறுபாடுகளுள் ஒரு சிலவற்றைப் பின்வருமாறு காணலாம்.

பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம் கூறுகிறதை எடுத்துக்காட்டி, 'ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்....' என்று நியாயப்பிரமாணத்திற்கு வேறான, அதற்கு மேலான கிறிஸ்துவின் கட்டளையைப் பின்பற்றும்படி இயேசு கிறிஸ்து கூறுவதை மத்தேயு 5 : 19–48 வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. எ–டு

> *"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.*
>
> ***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்;*** *தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு......." (மத்தேயு 5:38, 39)*
>
> *"உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.* ***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*** *உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்...." (மத்தேயு 5: 43, 44)*
>
> *"அன்றியும் ஓய்வு நாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வு நாளை வேலை நாளாக்கினாலும் குற்றமில்லாது இருக்கிறார்கள்.... மனுஷ குமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்." (மத் 12: 5–8)*
>
> *"நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள்..." (மாற்கு 7:13)*

இவ்வாறு பழைய ஏற்பாட்டில் உள்ள நியாயப்பிரமாணத்தை எடுத்துக்காட்டி, மாறாகப் புதிய நிலையில் விளக்கும் இயேசு கிறிஸ்து,

> *"ஒருவனும்* ***கோடித்துண்டை பழைய வஸ்திரத்தோடே இணைக்க மாட்டான்;*** *இணைத்தால், அதினோடே இணைத்த துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும். பீறலும் அதிகமாகும்.*
>
> *புது திராட்சரசத்தைப்* ***பழந்துருத்திகளில் வார்த்து வைக்கிறதுமில்லை.*** *வார்த்து வைத்தால் துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம்; துருத்திகளும் கெட்டுப்போம்; புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்து வைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்." (மத்தேயு 9:16,17)*

இவ்வாறு, கிறிஸ்து வருவதற்கு முற்பட்ட பழைய ஏற்பாட்டையும் கிறிஸ்து வந்த பின் உள்ள புதிய நிலையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். மேலும் இவற்றைப் பின்வரும் பகுதிகளும் தெளிவுபடுத்துகின்றன.

1. ப– உண்டு. ஆதி: 8 : 20. 21 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   ப– நிறைவேறிவிட்டது. எபே:5 : 2 (கிறிஸ்து வந்த பின்)

2. யூதர், புறசாதி எனும் ஏற்றத்தாழ்வு யாத். 12 : 17 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரத்தின் அங்கங்கள். எபே: 3:3 (கிறிஸ்து வந்த பின்)

3. புறசாதியார் யூதக் கோவிலுக்குள் வரக் கூடாது. அப்: 21 : 26 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   அனைவருக்கும் கோவி–ல் இடமுண்டு. ரோ. 3 : 29, 30 மத். 11 : 28 (கிறிஸ்து வந்த பின்)

4. ஓய்வுநாளில் வேலை செய்யக் கூடாது; உபா: 5:15 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   மனிதனுக்காகவே ஓய்வு நாள்; ஓய்வு நாளுக்காக மனிதன் அல்ல; மாற். 2: 26, 27 (கிறிஸ்து வந்த பின்)

5. அந்நிய தெய்வத்தின் பெயரைக் கூடச் சொல்லக் கூடாது. அந்நிய தெய்வத்தின் கோவிலுக்குள் செல்லக் கூடாது. சங். 16 : 4 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   அந்நிய கோவில்களுக்குச் சென்று, அவர்கள் வழிபாட்டு முறை, நம்பிக்கைகளை அறிந்து, அவற்றின் அடிப்படையில் நற்செய்தி கூறுதல். யூதனுக்கு யூதன், கிரேக்கனுக்கு கிரேக்கன். I கொரி: 9:20. 21 (கிறிஸ்து வந்த பின்)

6. அந்நிய தெய்வம் உண்டு. சங். 16 : 4 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   அந்நிய தெய்வம் என்பதற்கே இடமில்லை. ஒரே கடவுள் – ஒரே மந்தை ஒரே மேய்ப்பன். யோவான் 10:16; I கொரி:8:4 (கிறிஸ்து வந்த பின்)

7. விருத்தசேதனம் உண்டு. ஆதி. 17: 7–13 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   விருத்தசேதனம் இல்லை.கலா. 5 : 2–4 (கிறிஸ்து வந்த பின்)

8. பெண்களுக்கு விருத்தசேதனம் கிடையாது. (கிறிஸ்து வருவதற்கு முன்);

   கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் இல்லை; பெண் என்றும் இல்லை; அனைவருக்கும், ஞானஸ்நானம் யோ. 3 : 5 (கிறிஸ்து வந்த பின்)

9. கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல். உபா. 19 : 21 (கிறிஸ்து வருவதற்கு முன்);

   வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தைக் காட்ட வேண்டும். மத். 5 : 39 (கிறிஸ்து வந்த பின்)

10. ஆசீர்வாதம் என்பது பணம், செழுமை, நீண்ட ஆயுசு முத–யவை உபா. 28 : 2–14 (கிறிஸ்து வருவதற்கு முன்);

    கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் குப்பையாகத் தள்ளுவதே ஆசீர்வாதம். பி–ப். 3: 7–11 (கிறிஸ்து வந்த பின்)

எனவே, கிறிஸ்து வருவதற்கு முற்பட்ட நிலைக்கும் கிறிஸ்து வந்தபின் உள்ள நிலைக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து, கிறிஸ்துவின் ஒளியில், அவரவர் பண்பாட்டு அடிப்படையில் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும்போது தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

## ஐந்து கோணங்களில் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம்

கடவுள் பல பெயர்களில் கூறப்பட்டாலும் கடவுள் ஒருவரே என்பதைத் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களும், தத்துவங்களும் தெளிவாக விளக்குகின்றன. படித்தவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் நற்செய்தியைக் கூறுவதற்காக, தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம் வெவ்வேறு கோணங்களில் (Aspects) விளக்கப்பட்டுள்ளது.[6]

**1. புராண நோக்கு** (Mythical Aspect)[7]

**2. சிற்பவியல் நோக்கு** (Iconographic Aspect)[8]

**3. இலக்கிய நோக்கு** (Literary Aspect)[9]

**4. இறையியல், தத்துவ நோக்கு** (Theological /Philosophical Aspect)[10]

**5. வரலாற்று நோக்கு** (Historical Aspect)[11]

எளிய மக்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதற்குப் புராண நோக்கு மற்றும் சிற்பவியல் நோக்கு பயன்பட்டன. படித்த மக்களுக்கு இலக்கிய நோக்கு மற்றும் தத்துவ / இறையியல் நோக்கு பயன்பட்டன. எனவே, தோமா வழி தமிழ்க் கிறித்தவத்தை, திருமறை அடிப்படையில், கிறித்துவின் ஒளியில் பார்க்கும்போது, தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மண்ணில் புனித தோமா அடக்கம் செய்யப்பட்ட திருமயிலையில் இருந்துதான் முதல் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ நூலான திருக்குறள் மலர்ந்தது. அதன் பின், புனித தோமா இறை பணியாற்றி, இன்னுயிர் ஈந்த அதே தமிழ் மண்ணில், திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட பக்தி இயக்கமாகப் பரிணமித்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின் தமிழ் பக்தி இயக்கம் சைவ, வைணவ சமயங்களாக வளர்ச்சியுற்றதைச் சைவ, வைணவ இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.[12]

## கடவுளின் பெயர்கள்:

பொதுவாக, பெயர்களை இரண்டாகப் பிரிக்கலாம்; அவை

1. **இடுகுறிப் பெயர்** (Arbitrary Name)
2. **காரணப் பெயர்** (Logical Name)

## இடுகுறிப் பெயர் :

பெற்றோர் பிள்ளைகளுக்கு எந்தவிதக் காரணமும் இன்றி இடுகின்ற பெயர் இடுகுறிப் பெயர், ஏழைப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு, 'கோடீஸ்வரன்' என்று பெயர் வைக்கின்றனர். இதற்குச் சரியான காரணம் இல்லை. இது இடுகுறிப் பெயர். பொதுவாக இடுகுறிப் பெயர் மொழி பெயர்க்கப்படாது; ஆனால், காரணப் பெயர் மொழி பெயர்க்கப்படும்.

## காரணப் பெயர் :

ஏதாவது ஒரு காரணம் கருதி வைக்கப்பட்ட பெயர் காரணப் பெயர். எனவே, கடவுளுக்கு மனிதர் வைத்த பெயர்கள் அனைத்தும் காரணப் பெயர்களாகவே உள்ளன. அவை பொதுவாக மொழி பெயர்க்கப்படும்.

## ஒ–த் திரிபு :

இடுகுறிப் பெயர், காரணப் பெயர் தவிர மூன்றாவதாக ஒ– மாற்றமடைந்து காணப்படும் 'ஒ–த் திரிபை'க் கொள்ளலாம். இந்த மூன்று வகை பெயர்களில், கடவுளின் பெயர்களை எடுத்துக் கொள்வோமானால், அவை பெரும்பாலும் 'காரணப் பெயர்'களாகவே இருப்பதைக் காணலாம். எனவே, கடவுளின் பெயர் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இருப்பதைக் காணலாம். சில பெயர்கள் 'ஒ–த் திரிபாய்'க் காணப்படுவதுமுண்டு. 'இயேசு' என்னும் பெயரை எடுத்துக் கொண்டோமானால், இது மொழிக்கு மொழி ஒ– மாற்றம் பெற்றுள்ளதைப் பின்வருமாறு காணலாம்.

*எபிரேயத்தில் – ஜோசுவா*
*கிரேக்கத்தில் – ஈசுஸ்*
*ஆங்கிலத்தில் – ஜீசஸ்*
*அரபியில் – ஈசா*
*தமிழில் – ஈசன்*

என ஒ– மாற்றம் பெற்றுள்ளது.

*"ஈசன் வந்து சிலுவையில் மாண்டு*
*எழுந்து உயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்*
*நேசமா மரியா மகதலேனா*
*நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்."*

என்கிறார் பாரதியார். ஈசன் என்னும் சொல்லை, கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலுள்ள இந்திய இலக்கியங்கள் எவற்றிலுமே காண இயலாது. மனிதனாக அவதரித்த கடவுளை, 'இயேசு' என்கின்றனர் கிறிஸ்தவர்கள். 'ஈசன்' என்கின்றனர் சைவர்.

இதைப் போன்றே,

*கிரேக்கம் – 'கிறிஸ்டாஸ்'*
*ஆங்கிலம் – 'கிறைஸ்ட்' (Christ)*
*தமிழ் – 'கிறிஸ்து'*

'கிறிஸ்டாஸ்' என்பது 'கிறிஸ்து' என்று திரிந்துள்ளதே தவிர, இது மொழி பெயர்ப்பு ஆகாது. கடவுளின் பெயர்களை எடுத்துக் கொள்வோமானால், தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ முதல் இலக்கியமான திருக்குறளில், கடவுளின் பெயர்கள் காரணப் பெயர்களாகவும் மொழிபெயர்ப்புப் பெயர்களாகவும் இருப்பதைக் காணலாம்.[13]

திருக்குறளை அடுத்த பிற தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் பலவற்றில், 'யோசுவா', 'இயேசு', 'ஈசுஸ்' என்பவற்றின் ஒ–த் திரிபான 'ஈசன்' எனும் பெயரைக் காணலாம். பெரும்பாலும் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவப் புராணங்களும் இலக்கியங்களும் இறையியல் நூல்களும் பிதாவாகிய கடவுளையும் தூய ஆவியாகிய கடவுளையும் மனிதனாக வந்த கடவுளையும் தமிழ்ப் பண்பாட்டு, மொழி அடிப்படையில் பல்வேறு கோணங்களில், பல்வேறு பெயர்களில் மொழி பெயர்த்துள்ளமையையும், விளக்கியுள்ளமையையும் காணலாம். எனவே, கடவுளின் பெயர்களை நோக்கும்பொழுது அவை, மொழி பெயர்ப்பா, ஒ–த் திரிபா என்பதைக் கண்டறியும் போதுதான் அப்பெயர்கள் உணர்த்தும் ஆழமான பொருளை உணர முடியும். தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## அடிப்படைக் கோட்பாடுகள் :

கி.பி. முதல் நூற்றாண்டு முதல் பரவிய புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களின் அடிப்படையாகப் பின்வரும் கோட்பாடுகள் விளங்குகின்றன.[14]

1. **மூவொருமைக் கோட்பாடு**
2. **அவதாரக் கோட்பாடு**
3. **ப–நிறைவேற்றக் கோட்பாடு**
4. **பாவ மன்னிப்புக் கோட்பாடு**
5. **விசுவாசத்தினால் மீட்புக் கோட்பாடு**

கிறிஸ்தவத்தின் இக் கோட்பாடுகள், புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தின் விளைவான திருக்குறளிலும் புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ சமயங்களான சைவ, வைணவ இலக்கியங்களிலும் அடிப்படைக் கோட்பாடுகளாக விளங்குகின்றன. அவை,

*1. கடவுளை மூவொருவராகக் காணும் மூவொருமைக் கோட்பாடு (Doctrine of Trinity)*

*2. கடவுள் குருவாகிய மனிதனாக அவதாரம் எடுத்தார் என்னும் அவதாரக் கோட்பாடு (Doctrine of Avatar)*

*3. அவதாரம் எடுத்த கடவுள், மனிதனை மீட்க தன்னையே ப–யாக்கினார் என்னும் ப–நிறைவேற்றக் கோட்பாடு (Doctrine of Fulfilment of Sacrifice)*

*4. கடவுளிடம் சரணடைந்து, அவர் மீது நம்பிக்கை கொண்டால் பாவங்களி–ருந்து விடுதலை அடையலாம் என்னும் பாவ மன்னிப்புக் கோட்பாடு (Doctrine of forgiveness of sin)*

*5. கடவுளை நம்பினால் மீட்பு பெறலாம் என்னும் நம்பிக்கை வழி மீட்புக் கோட்பாடு (Doctrine of Salvation by Faith)*

இந்தப் புதிய கிறிஸ்தவக் கோட்பாடுகள் புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களில் அடிப்படைக் கோட்பாடு களாகப் பின்வருமாறு காணப்படுகின்றன.

## புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்

பொதுவாக, தமிழ் இலக்கியங்கள் சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியம் – அறநெறி இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியம், தத்துவ இலக்கியம்---- இடைக்கால இலக்கியம், இக்கால இலக்கியம் எனக் காலங்கள் அடிப்படையில் பகுக்கப்பட்டாலும் கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்கும் இடையிலுள்ள புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களை மூன்று பெரும் பிரிவுகளாகக் காணலாம். (காப்பியங்கள் குறித்து விரிப்பின் பெருகும்)

I. அறநெறி சார் கிறித்தவ இலக்கியம் – திருக்குறள்.

II. பக்தி இலக்கியம் – தோத்திரப் பாடல்கள் – பன்னிரு திருமுறையும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமும்

III. இறையியல் இலக்கியம் – சாத்திரப் பாடல்கள் மெய்கண்ட சாத்திரம் / சைவ சித்தாந்தம்

I

## முதல் புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம்

## திருக்குறள் –அறநெறி சார் கிறித்தவ இலக்கியம்

திருவள்ளுவரின் காலம் கி.மு. 31 என்று பொதுவாகக் கூறப்படுகிறது. பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுப்படி திருக்குறள் அறநெறிக் காலத்தைச் சார்ந்தது. சங்க காலத்தை இயற்கை நெறிக் காலம் என்றும், சங்கம் மருவிய காலத்தை அறநெறிக்காலம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் பிரித்துள்ளனர். அறநெறிக்காலம் என்பது கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளின் தொடக்கக் காலம் ஆகும்.

- திருக்குறள் இயற்கை நெறிக் கால நூல் அன்று; அறநெறிக் கால நூலே ஆகும்.
- திருக்குறள் ஆசிரியப்பாவில் இயற்றப்படவில்லை; வெண்பாவில் இயற்றப்பட்டுள்ளது.
- சங்ககால நூல் அன்று; சங்கம் மருவிய கால நூல் ஆகும்.

என்பவை ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு. எனவே, திருக்குறள் கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டைச் சார்ந்தது என்பது ஆய்வாளர்களின் முடிவு.[15]

### பாயிரத்தின் அமைப்பு :

பாயிரத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. 1. பொதுப்பாயிரம் 2. சிறப்புப்பாயிரம்

இவற்றுள் கடவுள் வாழ்த்தும், என்ன நோக்கத்திற்காக இந்நூல் எழுதப்பட்டது என்பதை உணர்த்துவதும் சிறப்புப் பாயிரமாகும். திருக்குறளின் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வ–யுறுத்தல் என நான்கு அதிகாரங்கள் உள்ளன.

திருக்குறளில் பாயிரத்தில் இடம் பெற்றுள்ள முதல் 3 அதிகாரங்களாகிய

1. கடவுள் வாழ்த்து – பிதாவாகிய கடவுளையும்[16]
2. வான் சிறப்பு – பரிசுத்த ஆவியாகிய கடவுளையும்[17]
3. நீத்தார் பெருமை – குமாரனாகிய கடவுளையும்[18] வாழ்த்திப் பாடுகின்றன. 4ஆம் அதிகாரமாகிய ''அறன் வ–யுறுத்தல்'', கடவுள் மனிதனாக வந்து, வாழ்ந்து காட்டிய அறத்தை வ–யுறுத்துகின்றது.[19]

## பாயிரத்தில் மூவொருமைக் கோட்பாடு கடவுள், வான், நீத்தார்

5ஆம் அதிகாரத்தின் முதல் குறளில் பிதாவாகிய கடவுளையும், பரிசுத்த ஆவியாகிய கடவுளையும், குமாரனாகிய கடவுளையும் ஒன்றாகச் சேர்த்து **"இயல்புடைய மூவர்"** எனும் தொடரால் குறிக்கின்றார். ''மூன்று வித வெளிப்பாடுகளில் – நிலைகளில் செயல்படும் ஒரே கடவுள்" அதாவது, 'One Essence Three Persons' ('Homoousius') என்பதை இந்த ஒரே தொடரில் திருவள்ளுவர் அழகாக விளக்கியுள்ளார்.[20]

கிறிஸ்தவ சமயத்தில் இறைவனை மூன்று நிலைகளில் காண்கின்றனர். அவை அருவம், அரு உருவம், உருவம் ஆகும்.

அருவ நிலையைத் தந்தை நிலை என்றும்,
அரு உருவ நிலையை ஆவிநிலை என்றும்,
உருவ நிலையை மகன்நிலை என்றும்,

கொள்ளுகின்றனர். மூவொரு கடவுளில் மகனாக வந்த கடவுளை ஐந்தவித்தான் எனும் பெயரில் வள்ளுவர் குறிப்பிடுவதைப் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

### ஐந்தவித்தான்

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்'.[21]

ஒரு கருவியின் வழியாகத் தன் உடலைப் ப–யாக்கிய கடவுள் நாம் நடக்க வேண்டிய ஒழுக்க நெறியைக் காட்டிச் சென்றார். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். அப்படிக் கூறியவரைப் பின்பற்றினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளலாம் என்கிறது இக்குறள். பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி என்பது ''பொறிவாயில் ஐந்தவித்தானாகிய இயேசு கிறிஸ்து காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியாகிய கிறிஸ்துவின் வழியைக் குறிக்கிறது".[22]

### சிலுவை :

இந்தியாவில் குற்றவாளிகளைச் சிலுவையில் அறையும் பழக்கம் இல்லை. எனவே, சிலுவை, "பொறி" என்று சொல்லப்பட்டுள்ளது. அவி–ப–; தன் உடலை – ''அவி''யாகக் கொடுத்தவன் – ப–யாக்கினவன். அப்படி ப–யாக்கினவரின் வழி வாழ்பவர் என்றும் நீடுவாழ்வர்.

இயேசு கிறிஸ்து இறந்து, உயிர்த் தெழுந்ததை

*'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலும் கரி'.* [23]

எனும் குறள் விளக்குகின்றது. இங்கு ஆற்றல் என்பது தன் உடலைப் ப–யாக்கியவரின் உயிர்த்தெழுந்த ஆற்றலைக் குறிக்கிறது.[24] இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு ஆகாயத்தில் உள்ள தூதர்களின் தலைவனாகிய இந்திரனே சான்று. ஆற்றல் என்பது கூற்றம் குதித்தலாகிய அதாவது, மரணத்தையே வென்ற ஆற்றல் என்பதைத் திருவள்ளுவர் பின்வரும் குறளில் தெளிவாக விளக்குகிறார்.

*'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்ற–ன்*
*ஆற்றல் தலைப்பட் டவர்க்கு'.*[25]

### இந்திரன் :

'இந்திரன்' என்பது எந்த ஒரு சமயத்திற்கும் உரிய பெயர் அல்ல, இந்திரன் என்றால் தலைவன் என்று பொருள், (எ.கா) கஜேந்திரன் – யானைகளின் தலைவன்; நரேந்திரன் – மனிதர்களின் தலைவன்; தேவேந்திரன் – தேவர்களின் தலைவன் ராஜேந்திரன் – ராஜாக்களின் தலைவன். எனவே, இந்திரன் என்றால் தலைவன் என்று பொருள். ''அகல் விசும்புளார் கோமான் இந்திரன்'' என்றால் ஆகாயத்திலுள்ள தூதர்களின் தலைவன் என்று பொருள். (''ஆண்டவரின் தூதர் வானின்று இறங்கி வந்து.......... உங்களுக்குச் சொல்–விட்டேன்" மத், 28 : 2–8)[26]

### வான் சிறப்பு :

"வான்" என்பது மழையைக் குறிக்கின்றது என்பர். மழை மட்டும் இருந்தால் போதுமா? ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகிய "காற்று" இல்லாமல் வாழ முடியுமா? ஐம்பெரும் பூதங்களுள் ஒன்று குறைந்தாலும் வாழ முடியாது. ஆவியை முன்மாரி, பின்மாரி, மழை, தூறல், பனி இவற்றோடு ஒப்பிட்டு